Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 15 ஆம் நாள் ஐ. ஆகிர் 21 (30-11-61) வியாழக்கிழமை இதழ் 247

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# பாடசாலைகளில்

## கத்தோலிக்க சமயபாடம்

### திருச்சபை அனுமதி பெற்றவர்களே போதிக்கலாம்

### கோரிக்கைக்கு கல்வி அமைச்சு இணக்கம்

கொழும்பு, புதன்

**தகுந்தவர்களென மேற்றிராணிமார்களால் அங்கீகரிக்கப்படும் ஆசிரியர்கள் மட்டும்தான் ரோமன் கத்தோலிக்க சமயத்தை அரசாங்க வித்தியாதிபதியின் கீழ் இயங்கும்பாடசாலைகளில் போதிக்க அனுமதிக்கப்படுவர்.**

**இது சம்பந்தமாக கொழும்பு அதிமேற்றிராணியார் கேட்டுக்கொண்ட கோரிக்கைக்கு கல்வி அமைச்சு சம்மதித்துள்ளது.**

ஒரு ஆசிரியர் ரோமன் கத்தோலிக்க சமயத்தைப் போதிப்பதற்கு நியமிக்கப்படுமுன்னர் மேற்றிராணியாரால் வழங்கப்பட்ட தராதரப் பத்திரத்தை அவர் வைத்திருக்கிறாரா என்பதை அறியுமாறு வித்தியாதிபதி அரசாங்க, வித்தியாதிபதியின் கீழ் இயங்கும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தார்.

அதிமேற்றிராணியார் கல்வி மந்திரிக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது.-

கத்தோலிக்க தேவாலயத்தினால் கத்தோலிக்க சமயத்தைப் போதிக்கலாமென அங்கீகரிக்கப்பட்டாலன்றி ஆசிரியர்கள் கத்தோலிக்க மதத்தைப் போதிக்கக்கூடாது.

இவ்வித தராதரப் பத்திரங்கள் பெற்றுள்ளவர்களை பெருமளவில் இடமாற்றம் செய்ய கல்வி இலாகா ஏற்பாடு செய்துள்ளது.

## உடனே சுடப்படுவர்!

லண்டன், நவ. 29

எவரும் ஆயுதங்கள் வைத்திருந்தாலோ அல்லது அரசாங்கத்துக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தாலோ அவர்கள் அக்கணமே சுட்டுக் கொல்லப்படுவார்கள் என கியூபா பிரதமர் பிடல் காஸ்ட்ரோ அறிவித்தார்.

## குரங்கு அனுப்பப்பட்டது

கேப்கன்வரோல், நவ. 29

அமெரிக்கா "சிம்பான்ஸி" குரங்கு ஒன்றுடன் பூமியைச் சுற்றி ஒரு ராக்கெட்டை விட்டிருக்கிறது. நாலரை மணி நேரம் பலமுறை இது பூப்பிரதட்சணம் செய்யும். குரங்கு இறங்கும் பேழையை மீட்க கப்பல்கள் கடலில் நிறுத்தப்பட்டுள்ளன.

---

## அணுசோதனைகளை நிறுத்துக

### வல்லரசுகளுக்கு சமாதான சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, புதன்

கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில் நடைபெற்ற இலங்கை சமாதான சங்கக் கூட்டம் அணுசோதனைகளை நிறுத்துமாறு வல்லரசுகளைக் கேட்டுக்கொண்டது. பிரதமர் அனுப்பிய செய்தியில் அணுசோதனைகளை நிறுத்துமாறு செய்வதில் உலக அபிப்பிராயத்தை ஒன்று சேர்ப்பதுபற்றி குறிப்பிட்டிருந்தார். திட்டமிடப்பட்ட பொது ஜன அபிப்பிராயத்துக்கெதிராக வல்லரசுகள் நடக்க முடியாது என்றும் பிரதமர் கூறியிருந்தார்.

## 'பெற்றோர்களின் கஷ்டத்தை அறிவேன்'

### நிருபர்களிடம் கல்வி மந்திரி பேச்சு

கொழும்பு, புதன்

**பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதுபற்றி பெற்றோர்களின் கஷ்டத்தைத் தாம் உணர்ந்திருப்பதாக கல்வி மந்திரி திரு. பதியுதீன் மஹ்மூது கூறினார்.**

மந்திரி இன்று நடத்திய பத்திரிகை நிருபர்கள் மகாநாடு ஒன்றில் பேசுகையில், பாடசாலைகளுக்கு கல்வி இலாகா இதுவரை ஒரு சுற்று நிருபமே அனுப்பியிருக்கிறது என்றும், 2 மைல் சுற்று வட்டாரத்திற்குள்ளேயே பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க முடியும் என்பதாகப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தி தவறானது என்றும் உண்மையான தகவலுக்கு உத்தியோக அறிக்கையையும், வானொலியையும் எதிர்பார்க்குமாறும் கூறினார்.

2 மைல் சுற்றளவுக்குள் உள்ள பிள்ளைகளுக்கு அங்குள்ள பாடசாலைகளில் பிரவேசம் சம்பந்தமாக முதலிடம் கொடுக்க வேண்டும் என்றே கட்டளையிடப்பட்டது என்றார் மந்திரி.

ராயல் கல்லூரி ஆரம்ப பாடசாலைக்கு குறைந்த வசதியுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளும் அடுத்த ஆண்டு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், சகலருக்கும் சம வாய்ப்பு அளிப்பதே தமது கொள்கை என்றும் அவர் கூறினார்.

கடாங்காவில்

## 2 ஐ. நா. ஊழியர் தாக்கப்பட்டனர்

### ஒரு கூர்க்கர் கொல்லப்பட்டார்

எலிஸபெத்வில்லி, நவ. 29

**எலிஸபெத்வில்லியில் இரு ஐ. நா. உத்தியோகத்தர்களைக் கடாங்கா துருப்பினர் தாக்கியதால் ஒருவருக்குக் கைமுறிந்ததாயும், வெட்டுக்காயம் ஏற்பட்டதாயும், மற்றொருவருக்கு மூக்கு உடைந்ததாயும் அறிவிக்கப்படுகிறது.**

ஐ. நா. தகவல் பகுதி தலைவர் ஸ்மித் என்பவரும், பிரிட்டனைச்சேர்ந்த எட்வார்ட் என்பவரும் 15 கடாங்கா வீரர்களால் தாக்கப்பட்டனர். இத்துருப்பினர் கைத்துப்பாக்கி, துப்பாக்கி ஆகிய ஆயுதங்களைத் தரித்திருந்தனர் என்றும், ஒரு விருந்துக்கூட்டத்தில் கலந்து கொள்ள அவர்கள் சென்ற போது துருப்புக்கள் "ஐ. நா., ஐ. நா" எனக் கோஷமிட்டதுடன், அவர்கள் இருந்த கட்டடத்திற்குள் புகுந்து இருவரையும் வெளியே இழுத்து வந்து துப்பாக்கியின் பின்புறத்தால் அடித்தார்கள் என்றும் கூறப்பட்டது. 10 நிமிஷம் இவர்கள் தாக்கப்பட்டனர். ஷோம்பேயின் இரு மந்திரிகள் துருப்புக்களுடன் சென்று இருவரையும் விடுவித்தனர் என்றும், ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

### இந்திய மேஜரை காணவில்லை

எலிஸபெத்வில்லியில் ஐ. நா. ஊழியர் மீது மீண்டும் தாக்கு

(8 பக்கம் பார்க்க)

## மந்திரி இலங்கரத்தின யாழ்ப்பாணம் வருகிறார்

### எம். பிக்களுடன் பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், புதன்

உணவு, வர்த்தக, கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன வடமாகாண எம். பிக்களுடன் ஒரு மகாநாட்டை நடத்துவதற்காக இங்கு டிசம்பர் 14-ம் திகதி விஜயம் செய்யவிருக்கிறார்.

தமது அமைச்சின் கீளுள்ள சகல முக்கிய பிரச்சினைகள் பற்றி எம். பிக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவே மந்திரி இங்கு வருவதாகத் தெரிகிறது.

விற்பனவு இலாகாவுக்கு கூட்டுறவு சங்கங்கள் விற்பனவு செய்யும் வாழைப்பழங்கள், கறுப்பு சீனி இறக்குமதியும் விற்பனவும் ஆகியன சம்பந்தமாக மந்திரி பேச்சு வார்த்தைகள் நடத்துவார்.

## கப்பல் மூலம் சிமெந்து அனுப்புவதே லாபமானது

### காங்கேசன் சிமெந்து கார்ப்பரேஷன் அறிவிப்பு

கொழும்பு, புதன்

தற்பொழுது ரயில் மூலம் அனுப்பாமல் கடல் மூலம் காங்கேசன்துறையிலிருந்து தென் இலங்கைக்கு சிமெந்தை அனுப்ப அனுமதித்தால் சிமெந்தை மலிவான விலைக்கு விற்பனை செய்யலாம் என சிமெந்து தொழிற்சாலைக் கார்ப்பரேஷன் தெரிவித்துள்ளது.

ஒரு சிமெந்து பையின் நிர்ணய விலை 8 ரூபாய் 50 சதம். ஆனால் ரயில் மூலம் ஏற்றுமதி செய்து விற்பனையாகும்போது இதற்காகும் செலவுகளையெல்லாம் சேர்த்து ஒரு சிமெந்துப் பையின் விலை 9 ரூபாய் 50 சதமாகிறது.

சிமெந்தை அதிகமான தொகையில் கப்பல் மூலமாக காலித்துறைமுகத்துக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென கார்ப்பரேஷன் கருத்து வெளியிட்டுள்ளது.

தற்பொழுது காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை வருடமொன்றுக்கு 80,000 டன் சிமெந்து தயாரித்து வருகிறது. வருடமொன்றுக்கு 250,000 டன் சிமெந்து தயாரிப்பதற்கு திட்டம் விஸ்தரிக்கப்பட இருக்கிறது.

## "சந்திரனுக்கு மனிதன் செல்லும் நாள் அதிக தூரத்திலில்லை"

### புதுடில்லியில் ரஷ்ய வானவெளி வீரர் ககாரின்

புதுடில்லி, நவ. 29

சோவியத் வானவெளி வீரர் யூரி ககாரினும், அவர் மனைவி வெலண்டைனும் இன்று புதுடில்லி வந்து சேர்ந்தபோது அவர்களுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. 9 நாள் அவர்கள் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். தேசிய விளையாட்டரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆரவாரத்துடன் அவர்களை வரவேற்றனர்.

ககாரின் நிருபர்கள் கூட்டத்தில் பேசினார். சந்திரனுக்கு மனிதன் செல்லும் நாள் அதிக தொலைவில் இல்லை என்றும் வானவெளிப் பிரயாண முயற்சியில் ரஷ்ய விஞ்ஞானிகளை மட்டுமன்றி இதர நாட்டு விஞ்ஞானிகளையும் தாம் பாராட்டுவதாயும் நிருபர்களிடம் அவர் குறிப்பிட்டார்.

"இலூஷியன் 18" ரஷ்ய விமானத்திலிருந்து அவர் இறங்கியவுடன் 5000க்கு மேலான மக்கள் அவரை வரவேற்றனர். மலர் மாலை அணிவிக்கப்பட்டது. ஸ்ரீமதி இந்திராகாந்தி, மந்திரி ஹுமாயுன் கபீர் ஆகியோருடன் திறந்த காரில் அவர்கள் வீதிவழியாகச் சென்றனர். ககாரின் தம்பதிகள் திரு. நேருவின் விருந்தினராக அவரது இல்லத்தில் தங்கியிருப்பார்கள். லக்னோ, பம்பாய், ஹைதராபாத், கல்கத்தா ஆகிய நகரங்களுக்குச் சென்றுவிட்டு, டிசம்பர் 7-ம் தேதி அவர்கள் இலங்கை வந்து 4 தினங்கள் தங்குவார்கள். கல்வி அமைச்சும், வெளி விவகார அமைச்சும் சோவியத் தூதராலயத்துடன் இணைந்து இலங்கையில் அவரது சுற்றுப் பிரயாணம் பற்றி விரிவான திட்டத்தைத் தயாரித்துள்ளன.

# கதிர்காம மடங்கள் அகற்றுவதற்கு ஆட்சேபனை

கொழும்பு, செவ்வாய்

"கதிர்காமத்திலுள்ள மடங்களை இடிப்பதோ அகற்றுவதோ சகல மதத்தவர்களின் மனதையும் புண்படுத்துவதாகும். இவ்வித ஆலோசனை இந்தப்பகுதியின் புனிதத்தன்மைக்கு பங்கம் விளைவிப்பதாக இருக்கும்"

இத் தீர்மானம் ஸ்ரீ ராம ஞான சபாவின் நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கதிர்காமப்பகுதியில் இடம் பெற்றிருக்கும் மடங்கள் புனிதத்தன்மை வாய்ந்தன. இவை பலவருடங்களாக பல சமயப் பெரியார்களால் பேணப்பட்டு வருகின்றன. இந்த மடங்கள் பல சமயச் சடங்குகளை நடத்தவும் சாதி சமய வேறுபாடின்றி பல யாத்திரிகர்கள் தங்கிச் செல்லவும் பெரும் உதவியாக இருந்துவந்துள்ளன. எனவே இந்த மடங்களை அகற்றுவது பலர் இதயத்தைப் புண்படுத்துவதாக இருக்கும் என்னும் தீர்மானங்களும் கமிட்டியினரால் நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானங்களடங்கிய பிரதிகளை கவர்னர்ஜெனரல், பிரதம மந்திரி, கலாசார மந்திரி, புத்தளை கிராமசபைத் தலைவர், அரசாங்க நகரத் திட்ட அமைப்பாளர் ஆகியோருக்கு அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# "போர்ச்சுக்கலுக்கு இறுதி எச்சரிக்கை விடுக"

## லோகசபையில்! எம்.பி. க்கள் வற்புறுத்து

புதுடில்லி, நவ. 28

போர்ச்சுக்கலின் காலனி ஆதிக்க ஆட்சியை இந்திய மண்ணிலிருந்து ஒழித்துக்கட்ட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பல உறுப்பினர்கள் மக்கள் சபையில் கோரினர்கள்.

1962 ஜனவரி 26-ம் தேதி அடுத்த குடியரசு தினத்திற்குள் போர்த்துக்கீஸியர் வெளியேருவிட்டால் இந்திய அரசாங்கம் பொலிஸ் அல்லது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு கோவா, டையூ, டாமன் ஆகிய பிரதேசங்களை விடுவிக்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் வற்புறுத்தினர்கள்.

சுயேச்சை திரு. எம். எம். பானர்ஜி கொண்டுவந்த தனிநபர் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தபோது இந்த கோரிக்கைகள் எழுப்பப்பட்டன.

இந்தியா நடவடிக்கை எடுத்தால் நெட்டோ கூட்டணி தலையிடும் என்று நினைப்பதற்கில்லை என்று ஜனசங்கம் திரு. வாஜ்பாயி கூறினர். இறுதி எச்சரிக்கை அனுப்பிவிடவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தியா போன்ற பெரிய நாடு "சுண்டைக்காய்" அளவில் உள்ள போர்ச்சுக்கலுக்கு இறுதி எச்சரிக்கை விடுவது கௌரவக் குறைவான செயலாகும் என்று (காங்கிரஸ்) திரு. ஜோகிம் ஆல்வா கூறினர்.

அரசாங்கம் இந்த விஷயத்தில் உறுதிப்பாட்டைம் துணிவையும் காட்டவில்லை என்று திரு. நாத்பாய் கூறினர். கோவாவை விடுதலை செய்தால் அது எங்கோ மோசம்பிக் ஆகிய காலனிகளிலும் விடுதலை எழுச்சியை மூட்டுமென்றும் கூறினர்.

போட்டி கோவா சர்க்கார் அமைத்தால் சர்க்கார் எல்லா வசதிகளையும் செய்துகொடுக்குமா? என்று சுயேச்சை திரு. பருச்சா கேட்டார்.

# ஹரிஜன் ராஷ்டிரபதியாக வரவேண்டும்

## காந்திஜி விருப்பம் பற்றி நம்பூதிரிபாட்

கோவில்பட்டி, நவ. 28

நாட்டில் யாரும் ரூ. 500க்கு அதிகமாகச் சம்பளம் வாங்கக்கூடாதென கேரள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நம்பூதிரிபாட் கூறினர். மேலும் காந்திஜி விரும்பியது போல் நாட்டின் ராஷ்டிரபதியாக ஒரு ஹரிஜன் நியமனம் செய்யப்பட வேண்டுமென கோவில்பட்டியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# 50 மணி நேரத்தில் உலக வலம்

## 5 பெண்கள் முயற்சி

கல்கத்தா, நவ. 28

ஒரு சினிமா நடிகை உட்பட ஐந்து பெண்கள் உலகத்தை 50 மணி நேரத்தில் விமானத்தில் சுற்றி ஒரு புதிய சாதனையை நிலைநாட்டும் தீரச்செயலில் இறங்கியுள்ளனர்.

இதற்கு முந்தி 1958-ல் ஜப்பானைச் சேர்ந்த குமாரி ரோஸ் கனேடகா என்பவர் 70 மணி 9 நிமிடங்களில் இதை சாதித்திருக்கிறார்.

ஜப்பான் சினிமா நடிகை 21 வயதான குமாரி ரூரிடோ அசோகா, பாகிஸ்தான் சுற்றுப் பிரயாணிகள் இலாகாவைச் சேர்ந்த 22 வயது திருமதி பௌசியா சயித், தாய்லாந்து விமான ஹாஸ்டஸ் 22 வயது குமாரிசார்ன்ஹோம், பிலிப்பைன் மாணவி 18 வயது குமாரி சிந்தியா ஓகஸ்டே, ஈரான் பத்திரிகையாளர் 26 வயது குமாரி பிருசே யகநகரி ஆகிய இளம் பெண்கள் தான் இந்த சாதனையை நிலைநாட்ட முனைந்துள்ளனர்.

# பிரெஞ்சு தூதுகோஷ்டி

சென்னை, நவ 28

பிரெஞ்சு தேசிய சட்டசபையைச் சேர்ந்த 3 அங்கத்தினர்கள் சென்னை வந்தனர். சட்டபூர்வமாக இந்தியாவிலுள்ள முன்னாள் பிரெஞ்சு பகுதிகளை மாற்றுவது சம்பந்தமாய் பிரெஞ்சு சட்டசபையில் ஒரு மசோதாவைக் கொண்டுவருதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை அவர்கள் செய்வர்.

# பட்டாச்சாரியா விடுதலையாகலாம்

புதுடில்லி, நவ. 28

கர்னல் பட்டாச்சாரியாவுக்கு வேவு பார்த்ததாக பாகிஸ்தான் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட தண்டனை குறைக்கப்படலாம் அல்லது விடுதலை செய்யப்படலாமென்று பிரதமர் நேரு மக்கள் சபையில் கூறினர். இப்போது இதுபற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை. இது பாகிஸ்தான் அரசாங்கத்தை அல்லது பாகிஸ்தான் ஜனாதிபதியை பொறுத்த விஷயம் என்றும் பிரதமர் கூறினர்.

இதற்கு தயாரில்லை யென்றால் சர்க்கார் கூறுவதெல்லாம் வோட்டு சேகரிக்கும் தந்திரம் தான் என்றார்,

கோவா சேராது இந்திய ஒருமைப்பாடு பூர்த்தியடையாது என்றார் கம்யூனிஸ்ட் திருமதி பார்வதி கிருஷ்ணன்.

டிசம்பர் 8ந் தேதி விவாதம் தொடங்கும்.

# ஊசி மருந்தில் ஈ!

## குற்றவாளியைக் கண்டுபிடிக்க லோகசபையில் கோரிக்கை

புதுடில்லி, நவ. 28

பொதுத் துறையிலுள்ள இந்துஸ்தான் மருந்து உற்பத்திச்சாலையைப் பற்றி மக்கள் சபையில் கம்யூனிஸ்ட உறுப்பினர் திரு. எஸ். வி. பருபேகர் தவிர மற்றெல்லா உறுப்பினர்களும் பாராட்டிப் பேசினர்கள்.

இந்துஸ்தான் மருந்து உற்பத்திசாலையின் 1958-59; 1959-60-ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளின் மீது மக்கள் சபையில் இரண்டு மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

அந்த மருந்துச்சாலையில் தயாரிக்கப்பட்ட ஸ்ரெப்டமிசின் ஊசி மருந்தில் சமீபத்தில் ஈ இருந்து கண்டுபிடிக்கப்பட்டது, விவாதத்தின்போது சுட்டி காட்டப்பட்டது.

அந்த மருந்துச்சாலையின் பெயரைக் கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு விஷமத்தனமாக யாரோ அந்த மருந்தில் ஈயை போட்டிருக்க வேண்டும் என்றும் அந்தக் குற்றவாளியைக் கண்டுபிடித்து சரியானபடி தண்டிக்க வேண்டுமென்றும் திரு. என். ஜி. கோரே தெரிவித்தார்.

மருந்துச்சாலையின் நிர்வாகத்தை திரு. பருபேகர் பேசுகையில் கண்டித்தார். உலக சுகாதார ஸ்தாபனத்தோடு செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தின்படி "லாப நஷ்டமில்லாத" கொள்கை அடிப்படையில் அதை நடத்தவில்லையென்றும், அது லாப நோக்கத்தோடு நடத்தப்படுகிறது என்றும் அவர் கூறினர்.

விவாதத்திற்குப் பதிலளித்த தொழில்மந்திரி திரு. மனுபாய்ஷா அந்த மருந்துச்சாலை திருப்திகரமாக நடைபெறுகிறதென்று தெரிவித்தார்.

பென்சிலின், ஸ்ரெப்டமிசின் போன்ற மருந்துகளின் விலை குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறினர்.

மருந்தில் ஈ இருந்த சம்பவத்தைப் பத்திரிகைகளும் உறுப்பினர்களும் பெரிதாக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்துஸ்தான் மருந்து உற்பத்திச்சாலையில் வருடத்திற்கு வருடம் உற்பத்தி அதிகரித்து வருகிறதென்றும் அதைப் போலவே வருடத்திற்கு வருடம் மருந்துகளின் விலை குறைந்து வருகிறதென்றும் அவர் குறிப்பிட்டார்.

சீனு--இந்தியா தகராறு

# "எல்லை நிலை இந்தியாவுக்கு சாதகமாக மாறிவருகிறது"

## பிரதமர் நேரு அறிக்கை

புதுடில்லி, நவ. 28

சீனவுடனுள்ள எல்லைத் தகராறில், வடஎல்லையின் நிலை இந்தியாவுக்குச் சாதகமாக மாறி வருகிறதென்று பிரதமர் நேரு இன்று லோகசபையில் கூறினர்.

"ராணுவ ரீதியிலும் இதர வகையிலும் கடந்த 2 ஆண்டுகளில் நிலைமை இந்தியாவுக்குச் சாதகமாக மாறிவருகிறது. இந்தக் காலத்தில் சீனர்கள் 3 புதிய ராணுவ நிலைகளை அமைத்திருக்கின்றனர். ஆயிரக்கணக்கான சதுர மைல் பிரதேசத்தை அவர்கள் புதிதாக ஆக்கிரமித்திருப்பதாய்க் கூறப்படுகிறது சரியல்ல" என்றும் பிரதமர் கூறினர்.

"எல்லையில் தொடர்ந்து நமது வலிமையைப் பெருக்கி வருகிறோம். உரிய சமயத்தில் சீனர்களின் பிடியிலிருந்து அவற்றை மீட்போம். வடகிழக்கு எல்லைப் புற ஏஜன்ஸியின் எல்லையை நாம் நல்ல முறையில் பாதுகாத்து வருகிறோம்" என்றும் நேருஜி கூறினர்.

சீன எல்லையில் இந்தியா ஆக்கிரமிப்பு செய்திருப்பதாயும், இந்தியத் துருப்புக்களும் விமானங்களும் சீனவுக்குள் பிரவேசித்திருப்பதாயும் சீனவும் குற்றஞ்சாட்டியிருக்கிறது. இதற்கு ஆதாரமே இல்லை எனப் பிரதமர் குறிப்பிட்டார்.

[i பக்கங்கள் கொண்ட சீன - இந்திய கடிதப்போக்குவரத்து, இதர குறிப்புக்கள் ஆகியவற்றை லோகசபையிலும் ராஜ்யசபையிலும் அவர் சமர்ப்பித்தார். பிரதமரின் பேச்சின்போது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பலதடவை கோபத்துடன் குறுக்கிட்டனர்.

# நேதாஜி அஸ்தியை இந்தியா கொண்டுவருவதில் கஷ்டம்

## நேரு அறிவிப்பு

புதுடில்லி, நவ. 28

ஜப்பானிலிருந்து நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் அஸ்தியை அன்னார் குடும்பத்தாரின் ஆசியின்றி இந்தியாவுக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியாது என்று பிரதம மந்திரி நேரு மக்கள் சபையில் கூறினர்.

நேதாஜி அஸ்தியையும் ராஷ்பிகாரிபோல் அஸ்தியையும் இந்தியாவுக்கு முழு ராணுவ மரியாதையுடனும் சடங்குடனும் கொண்டுவர வேண்டும் என்றும் டில்லியில் அவற்றை வைத்து ஞாபகச் சின்னம் அமைக்க வேண்டும் என்றும் கோரி, காங்கிரஸ் அங்கத்தினர் இக்பால்சிங் கொண்டுவந்திருந்த தனி நபர் தீர்மானத்துக்கு நேரு பதில் அளித்தார்.

தீர்மானம்பற்றி ஒரு மணி நேரம் விவாதம் நடந்தது. அரவிந்தகோசால் நீங்கலாக எல்லோரும் இத்தீர்மானத்தை ஆதரித்தனர். அங்கத்தினர் அரவிந்த காசால் மட்டும் நேதாஜி உயிருடன் இருப்பதாக வாதாடினர்.

கோசால் வாதத்தைப்பற்றி நேரு குறிப்பிடுகையில் அரசாங்கம்விசாரணைகளிலிருந்தும் இதர ருசுக்களிலிருந்தும் நேதாஜி இறந்துவிட்டார் என்று தாம் நம்புவதாக நேரு குறிப்பிட்டார். நேதாஜி சகா ஷாநவாஸ்கான் தலைமையில் சர்க்கார் முடிவாக ஒரு கமிட்டியை நியமித்ததாகவும் அக்கமிட்டியும் நேதாஜி இறந்தார் என்ற முடிவுக்கே வந்ததாகவும், கமிட்டி அங்கத்தவரான போஸ சகோதரர் மட்டும் மாறுபட்ட முடிவு கட்டினர் என்பதையும் நேரு நினைவூட்டினர். போஸ சகோதரர் அபிப்பிராயம் சரியல்லஎன்றே சர்க்கார் கருதுகிறதென்று நேரு கூறினர்.


# மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மோனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

– தயாரிப்பவர்கள் –

## ஏ. எம். புகாரி அன் கோ.

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# "எவரெஸ்ட் நேபாளத்தில் இருப்பதாகவே கருதுகிறோம்"

## மக்கள் சபையில் நேருஜி

புதுடில்லி, நவ. 28

எவரெஸ்ட் மலை, நேப்பாளப் பிரதேசம்தான் என்றே இந்தியா எப்போதும் கருதி வந்திருக்கிறது என்று பிரதம மந்திரி நேருஜி மக்கள் சபையில் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

சீன-நேப்பாள எல்லை ஒப்பந்தம் பற்றிய துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பிரதம மந்திரி மேற்கண்ட தகவலையும் தெரிவித்தார்.

காட்டுமாண்டு-லாசா நெடுஞ்சாலை அமைக்கப்படுவது பற்றி இந்திய சர்க்கார் தங்களது கருத்தை நேப்பாள அரசாங்கத்துக்குத் தெரிவித்ததா என்று திரு. சி. ஆர். நரசிம்மன் கேட்டார். இதற்கு பதிலளிக்கையில் பிரதம மந்திரி உத்தேச நெடுஞ்சாலை அமைப்பு பற்றி இந்திய சர்க்கார் தமது கருத்தை பூர்வாங்கமாக மாத்திரம் நேப்பாள சர்க்காருக்குத் தெரிவித்துள்ளது என்று பதிலளித்தார். ஆனால் இவ்விதம் அறிவித்த செய்தியின் விவரத்தை சபையில் வெளியிடவில்லை. டாக்டர் ராமசுபாக்சிங் கேட்ட கேள்விக்கும் நேருஜி எவரெஸ்ட் சிகரம் பற்றிய பிரச்சினை பற்றி நேப்பாள சர்க்கார் இந்திய சர்க்காருக்கு தெரிவிக்கவில்லை என்றும் அது நேப்பாள-திபேத் எல்லைப் பிரச்சினையாகையால் அதில் இந்தியாவுக்கு நேரடி சம்பந்தமில்லை என்றும் இருந்தாலும் அவ்விஷயத்தில் இந்தியாவுக்கு மறைமுகமான அக்கறை இருக்கிறதெனவும் பதிலளித்தார்.

இதற்கு முன்னதாகக்கேட்ட கேள்விக்குப் பதிலளித்த வெளிவிவகாரத் துணை மந்திரி திருமதி லட்சுமி மேனன் சுங்கம், தேசங்களின் அமைப்புகள், ஆறுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே நாட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்படவேண்டும் என்ற இந்தியக் கொள்கையை நேப்பாளமும் ஒப்புக்கொண்டும் உறுதி செய்துமுள்ளது என்று பதிலளித்தார். சீன-நேப்பாள எல்லை ஒப்பந்த நகல் அண்மையில் தான் வந்து சேர்ந்தது என்றும் இதனை பரிசீலித்து வருவதாகவும் துணை மந்திரி கூறினார். இந்தியா-நேப்பாளம்-திபேத் முச்சந்தி எல்லைப் பகுதிகள் பற்றி நேப்பாளம் இந்தியாவுடன் முன்னதாகக் கலந்தாலோசித்ததா என்று மற்றொரு கேள்வி கேட்கப்பட்டது. இதனை குறித்து திட்டவட்டமான செய்தி நேப்பாள சர்க்காருக்கு இந்தியா தெரிவித்துள்ளது என்று திருமதி மேனன் பதிலளித்தார்.

# பொலிஸ் அதிகாரியை தாக்கியதாக வழக்கு

## சென்னை மாநகராட்சிமன்றஉறுப்பினர் விடுதலை

சென்னை, நவ. 28

கடமையைச் செய்ய முடியாமல் பொலிஸ் அதிகாரியைத் தடுத்ததாக சென்னை மாநகராட்சி மன்ற தி. மு. க. உறுப்பினர் திரு. கபாலி மீது தொடரப்பட்ட வழக்கை ஐந்தாவது மாகாண மாஜிஸ்திரேட் திரு. எஸ். நடராஜன் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்தார்.

பிராஸிகியூஷன் தரப்பு சாட்சியங்கள் திருப்திகரமாயில்லை என நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

வியாசர்பாபு சப்-இன்ஸ்பெக்டர் திரு. என். உடையப்பா தமது கடமையைச் செய்கையில் திரு. கபாலி அவரைத் தடுத்துத் தாக்கியதாகப் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. வழக்கு விபரம் வருமாறு:

கடந்த 3-10-61 அன்று வேப்பேரி ஸ்டிரிங்கர் தெருவில் விளக்கு வெளிச்சத்தில் 12 பேர் சூதாடிக் கொண்டிருந்தனர். திரு. என். உடையப்பா மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அவர்களைப் பிடிக்கச் சென்றபோது 3 பேர் ஓடி கபாலி வீட்டில் ஒளிந்து கொண்டனர். அவர்களைப் பிடிக்கச் சப்-இன்ஸ்பெக்டர் திரு. உடையப்பா முயல்கையில் திரு. கபாலி அவரைப் பிடித்துத் தள்ளி பலாத்காரமாகத் தாக்கியதாகப் பிராஸிகியூஷன் தரப்பில் கூறப்பட்டது.

திரு. கபாலி குற்றத்தை மறுத்தார்.

# கம்யூனிஸ்டுகளுடன் கூட்டுசேராதீர்!

## தி. மு. க.வுக்கு ராஜாஜி உபதேசம்

சென்னை, நவ. 28

"காங்கிரஸை விடக்கொடுமையும், பலவந்தமுமுள்ள நிர்வாக முறையை ஆதரிக்கும் கம்யூனிஸ்ட்கட்சியுடன் கூட்டு சேருவது இரும்புச்சட்டியிலிருந்து நெருப்புச் சட்டிக்குள் விழுவிது போலவே ஆகும்" என்று ராஜாஜி கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டுசேரவேண்டாமென திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உபதேசம் செய்துள்ளார்.

அவர் மேலும் பின்வருமாறு கூறுகிறார்:-

"தங்களுக்கென்று ஒரு தாய்நாடு இருப்பதாகவே எண்ணமல் 'மாஸ்கோவா பீக்கிங்கா' என்று தத்தளித்துக்கொண்டிருக்கும் கட்சியுடன் தனித்தமிழ்நாட்டில் பற்றுக்கொண்டவர்கள் உடன்படிக்கை செய்துகொண்டால் மண் குதிரையை நம்பி நட்டாற்றில் இறங்கிய கதையாகத்தான் முடியும். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் அது தன்னை காங்கிரஸின் எதிரியாகச் சொல்லிக்கொள்ளவில்லை. காங்கிரஸில் கம்யூனிஸம் மேலும் அதிகமாகக் கலப்பதையே அது எதிர்பார்க்கிறது என்பது தெளிவாகிவிட்டது. இதனை மனதில் கொண்டு திராவிடமுன்னேற்றக் கழகம் ஒரு விவேகமான முடிவுக்குவருமென்று எதிர்பார்க்கிறோம்."

### காலனி மக்களுக்கு சுதந்திரம் வழங்குக

### ஐ. நா. பொதுச்சபை தீர்மானம்

நியூயோர்க், நவ. 28

காலனி மக்களுக்கு சுதந்திரம் வழங்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஆளும் அரசுகள் அமுல் செய்ய வேண்டும் என ஆசிய ஆபிரிக்க நாடுகள் கொண்டுவந்த ஒரு தீர்மானம் ஐ நா.வில் நிறைவேறியது. இதுசம்பந்தமாக ஒரு விசேஷ கமிட்டியை நியமிக்க வேண்டுமென்ற தீர்மானமும் அங்கீகரிக்கப்பட்டது. வருகிற ஆண்டுக்குள் காலனிகளுக்கு சுதந்திரம் வழங்க வேண்டுமென்று ரஷ்யா கொண்டுவந்த ஒரு திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

# '25 ஏக்கர்' நிலமிருந்தாலும் நான் பணக்காரனல்ல'

## இலட்சுமித்தோட்ட விசாரணையில் இ. தொ. கா. உதவி காரியதரிசி சாட்சியம்

கொழும்பு, புதன்

இலட்சுமித் தோட்ட விசாரணை நேற்று மீண்டும் ஆரம்பமானபோது இ. தொ. கா. உதவிப் பொதுக் காரியதரிசி திரு. ஆர். அருணாசலத்தை இ. தொ. கா. சார்பில் ஆஜரான திரு. எம். திருச்செல்வம் விசாரணை செய்தார். திரு. அருணாசலம் தெரிவித்ததாவது:

புதிய பிரட்டுப் பகுதியில் உள்ள தங்கள் 'லைன்' வீடுகளுக்கு வேலை நிறுத்தம் செய்யாதவர்கள் கல்லெறிவதாக வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் என்னிடம் தெரிவித்தனர். இரண்டு பிரிவினருக்குமிடையே கைகலப்பு ஏற்படக் கூடிய சாத்தியமிருந்ததால்நான்கம்பளை உதவி பொலிஸ் சுப்பிரின்டெனுக்குப் புகார் செய்தேன். அன்றிரவே ஆயுதந் தரித்த பொலிசார் அங்கு முகாமிட்டனர். காலை ஒரு மணிவரை அவர்கள் அங்கு இருந்தனர். பின்னர் இரண்டு பொலிஸ்காரர்களை அங்கு விட்டுவிட்டு பொலிஸ் கோஷ்டி தோட்டத்தை விட்டுச் சென்றது.

தோட்ட நிர்வாகத்தின் சார்பில் ஆஜரான திரு. ஜயவிக்கிரமாவின் குறுக்கு விசாரணைக்கு சாட்சி அருணாசலம் பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினார்:

### நிலமிருந்தாலும் பணக்காரனல்ல

நான் ஒரு தொழிற்சங்க உழைப்பாளி. எனக்கு சுமார் 25 ஏக்கர் நிலமிருந்தாலும் நான் ஒரு பணக்காரன்என்று கருதவில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனக்கு மாதாமாதம் ரூ. 250 அலவன்ஸ் தருகிறது.

ஜய: கமிஷன் செலவுக்காக எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டது?

திரு. இந்தக் கேள்விபொருத்தமற்றதாகையால் இதை நான் ஆட்சேபிக்கிறேன்.

கமிஷனர்: நான் அதை அனுமதிக்கிறேன்.

சாட்சி அருணாசலம் கூறியதாவது:

தொழிலாளர் ஒவ்வொருவரும் தலா ஒரு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்கோரிக்கைக்கு சென்ற மாதத்தில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

திரு. இந்தக் கேள்விகளை நான் ஆட்சேபிக்கிறேன். வழக்காளி ஒருவரிடம் "வழக்குக்காக எவ்வளவு செலவழிக்கிறாய்"? என்று கேட்டதை நான் தொழில் செய்த காலத்தில் அறிந்ததே இல்லை.

கமிஷனர்: எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டதென்பதுபற்றி ஓரளவு மதிப்பிட்டாவது சொல்ல முடியுமா?

சாட்சி: சுமார் நாற்பதாயிரம் ரூபாய்.

திரு. அருணாசலம் மேலும் கூறியதாவது:

காங்கிரசின் பணம் இந்தியன் வங்கியில் போடப்பட்டுள்ளது. காங்கிரசின் கணக்கு வழக்குகள் பற்றி எனக்குத் தெரியாது.

இலட்சுமித் தோட்டத்தில் காவற்காரர்களின் துப்பாக்கிப் பிரயோக சம்பவம் நடைபெற்ற பொழுது நானும் திரு. தொண்டமானும் கொழும்பிலிருந்தோம்.

மேல் விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

### ஆயுதப்பரிகரணம்

மாஸ்கோ, நவ. 28

பரிபூரண ஆயுதப் பரிகனத்தில்தான் அணுத்தடைக்கு தீர்வுகாணமுடியும் என "பிராவ்டா" பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது. ஆனல் முதலில் அணுசோதனையை நிறுத்த இணங்குவதே சரியான பரிகாரம் என ஜெனிவாவில் பிரிட்டனும் அமெரிக்காவும் கூறின.

ஆயுதப்பரிகரணப் பேச்சுவார்த்தையில் பிரான்சும் கலந்துகொள்ளவேண்டுமென கோரியதுமட்டுமே ரஷ்யாவின் யோசனையில் நல்ல அம்சம் என்றும், இதர அம்சங்கள் பயனற்றவை விபரல் என்றும் டெயிலி பத்திரிகை கூறுகிறது.

### தேர்தல் ஆட்சேப மனுக்கள்

கொழும்பு, புதன்

பதின்மூன்று தேர்தல் ஆட்சேப மனுக்கள் அடுத்த இரண்டு மாதகாலத்துக்குள் விசாரணை செய்யப்படவிருக்கின்றன. இதுசம்பந்தமான மசோதாவை டிஸம்பர் 5-ந் திகதி செனட்சபை அங்கீகரித்தவுடன் தேர்தல் நீதிபதிகளை நியமிக்க ஒழுங்குகள் செய்யப்படும்.

ஜனவரி மாதத்தில் தேர்தல் ஆட்சேப மனுக்கள் மீதான விசாரணை ஆரம்பமாகலாமெனத் தெரிகிறது.

இரண்டு பொதுத் தேர்தல்களைத் தொடர்ந்து 13 தேர்தல் ஆட்சேப மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### பிரான்ஸ் ஸ்தம்பித்தது

பாரிஸ், நவ. 29

பிரான்சில் சம்பள உயர்வு கோரி ஐந்து லட்சம் தொழிலாளர் நேற்று வேலைநிறுத்தம் செய்ததால் பிரான்ஸ நேற்றுச் செயலற்றுப் போனது.

# அனுமதியளித்தாலே ஆட்குறைப்பு

## சட்டம் கொண்டுவர ஆளும்கட்சி யூனியன்கோரிக்கை

## தோட்டங்களில் இலங்கையரை வேலைக்கமர்த்தவும் யோசனை

கொழும்பு, புதன்

"ஆட்குறைப்புச் செய்வதாகவிருந்தாலும் நிதிநிலமை அல்லது வேறு காரணங்களினல் ஸ்தாபனத்தை மூடிவிடுவதாகவிருந்தாலும் தொழில் இலாகாவிடம் வர்த்தக ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றும் முன் அனுமதி பெறவேண்டுமென்று வர்த்தக ஸ்தாபனங்களைக் கட்டாயப் படுத்தும் சட்டம் உடனடியாகத் தயாரிக்கப்படவேண்டும்" என்னும் ஒரு தீர்மானம் இரத்தினபுரியில் நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் கொண்டுவரப் படவிருக்கிறது.

கட்சியின் வருடாந்த மகாநாடு இரத்தினபுரி சீவாலி மத்திய கல்லூரியில் சனிக்கிழமை காலை ஆரம்பமாகிறது. ஸ்ரீலங்கா தொழிற்சங்க சம்மேளனம் மேற்கண்ட தீர்மானத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளது. வர்த்தக ஸ்தாபனம் எதையும் மூடுவதற்கு தொழில் இலாகா அனுமதியளித்தால் அந்த ஸ்தாபனத்தை அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டும் என்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

### தோட்டங்களில் இலங்கையர்

தோட்டங்களில் இனி காலியாகும் இடங்களுக்கு சாத்தியமான அளவு இலங்கையரையே தெரிவுசெய்யவேண்டுமென்று தோட்ட முதலாளிமாரை அரசாங்கம் கட்டாயப் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் மற்றொரு தீர்மானத்துக்கும் சம்மேளனம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

கிறிஸ் மஸ் மலிவு விற்பனை
ஆரம்பமாகும்
நாளை எதிர்பாருங்கள்
↓
டயரும்ஸ்
மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

**மணி வாக்கு**

'பிறர் பாரத்தைத் தாங்கக் கைகொடுத்தால் நம் பாரம் கனம் குறையும்.'


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ 15 உ (30-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பொது சன நூல் நிலையம்

தென்கிழக்கு ஆசியாவிலேயே ஒரு சிறந்த நூல் நிலையமாக விளங்க வேண்டுமென்ற பெருநோக்குடன் யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையம் திட்டமிடப்பட்டிருப்பது இலங்கைக்கே பெருமைதருவதாகும். இத்தகைய ஒரு நூல் நிலையம் அவசியமென்பதை யாழ்ப்பாணத்தின் முன்னாள் மேயர்கள் பலர் உணர்ந்து அதற்கான ஆக்க வேலைகளை ஆரம்பித்து வைத்தனர். அத்துடன் நூல் நிலைய இயக்கத்தில் ஆர்வமுள்ள பிரமுகர்களின் ஆதரவும் இம் முயற்சிக்கு உறுதுணையாக இன்றுந்தான் இருந்து வருகின்றது. இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களும் இத்துறையில் மிகுந்த சிரத்தை காட்டிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. காலஞ்சென்ற வண. பிதா லாங் யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகள் வாய்ந்த ஒரு நூல்நிலையம் நிறுவப்படல் வேண்டுமெனப் பெரிதும் விரும்பியதுடன் அதற்கான திட்டங்களை வகுப்பதற்கும் உதவியாக இருந்து வந்தார்.

தமிழ் பேசும் மக்களின் பெருமைக்கும் அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் பொது சன நூல் நிலையம் அமைய வேண்டுமென்பது யாழ்ப்பாண நூல்நிலைய இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர்களின் உன்னத நோக்கமாக இருந்து வருகின்றது. இவர்களின் நோக்கத்தை நிறைவேற்றித் தமிழ் பேசும் மக்களின் பெருமையை நிலை நாட்டவேண்டுமானால் கட்டட நிர்மாண சிற்பியின் திட்டப்படி யாழ்ப்பாணப் பொது நூல் நிலையக் கட்டடம் பூர்த்தியாக்கப்படல் வேண்டுமென மேயர் கருதுவதை அனைவரும் வரவேற்பர்.

இப்பாரிய கட்டடத்தை நிறைவேற்றுவதற்கு நிதி திரட்டுவதற்காக நூல் நிலைய இயக்கத்தினர் 'கொடித்தினம்' ஒன்றினை நேற்று ஆரம்பித்துள்ளனர். நேற்றைய தினம் மாணவர்க்கென ஏற்படுத்தப்பெற்றது. டிசம்பர் மாதம் 2ந் திகதியில் பொது மக்களுக்கெனக் 'கொடித்தினம்' ஏற்படுத்தப்படும். யாழ்ப்பாணம் முழுவதிலும் நடைபெறும் இத்தினம் அனைவரினதும் ஆதரவைப் பெறுமென நம்புகின்றோம்.

நூல் நிலையங்கள் பேரறிஞர்களினதும் பெரியோர்களினதும் ஆன்மாக்கள் வாழும் புனித ஸ்தலங்களாகும். அங்கெல்லாம் ஞான ஒளி பிரகாசித்துக்கொண்டிருப்பதுடன் அறிவு மணமும் கமழ்ந்து கொண்டேயிருக்கும்.

ஒரு நாட்டு மக்களின் பண்பாடு, நாகரிகம், கல்வி, சமயம், கலை ஆகியவை வளர்ச்சியுறுவதற்கு நூல் நிலையம் அவசியமானதென்பதை எவரும் மறுக்க முன்வரார். ஈழ நாட்டில் தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டையும் மொழியையும் கலைகளையும் சீரிய முறையில் பாதுகாத்து வளர்த்தற்கு இங்கு சிறந்த நூல் நிலையம் ஒன்றினை அமைத்தல் அத்தியாவசியமென யாழ்ப்பாண மேயர் கொடித்தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள தமது வேண்டுகோளில் நினைவூட்டியிருக்கின்றார்.

சிறுவர்களுக்கேற்ற ஒரு பகுதியும் இப் பொது சன நூல் நிலையத்தில் ஏற்படுத்தப்படுமென்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாகும். நூல் நிலைய இயக்கத்தினரின் நன் முயற்சிகள் அனைத்துக்கும் பொது மக்களின் ஆதரவு கிடைத்து வருவதுபோல் கொடித்தினத்தையும் அவர்கள் ஆதரித்து நிதி உதவுவார்கள் என நம்புகின்றோம்.

# ஆறுமுக நாவலரும் தமிழும்

— அம்பலவாணன் —

சைவமும் தமிழும் புத்துயிர் பெற அவதரித்த சைவப் பெரியார் தமிழ் வசன நடைக்குத் தந்தை. குறியீட்டுப் புள்ளிகளை முதன் முதலாகத் தமிழில் உபயோகித்துக் காட்டிய தமிழ்ப் பேராசான். "நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழங்கே சுருதியெங்கே" என்று தமிழ்ச் சங்க இலக்கண இலக்கியநூல்களை முதன் முதல் பதிப்பித்து, டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயருக்கு வழிகாட்டிய சி. வை. தாமோதரம்பிள்ளை கூறியுள்ளார். சைவசித்தாந்த சாகரமாக விளங்கிய சிவஸ்ரீ கா சிவாசி செந்திநாதையர் அவர்கள் நாவலர் பெருமானைத் தமது ஞானகுருவாகத் தொழுதுள்ளார். செட்டிநாட்டுச் சைவ ஆசாசீலர் திரு. சொக்கலிங்க ஐயர் அவர்கள் நாவலர் அவர்களைத் தமது குருவாகப் போற்றிப்புகழ்மாலை சூட்டியுள்ளார். சைவ சித்தாந்த சரபம் திருப்பெருந்திரு ஈசான சிவாசாரியார் அவர்கள் நாவலர் பெருமானுடைய பாலபாடப் புத்தகம் உபநிஷதத்தின் சாரம் எனவும், சைவமும் தமிழும் வளர்த்த வள்ளல் நாவலர் பெருமான் எனவும் பகிரங்கமாகப்பல மேடைகளில் பிரசங்கம் செய்துவருகிறார்கள்.

சில எழுத்தாளர்களின் அட்டகாசமும் கல்வீச்சும் சில பண்டிதர்களின் ரீங்காரமும் தனித் தமிழ்த் தொண்டர் குழாமின் அறைகூவலும் எவ்வளவு தூரம் ஏற்கத்தக்கன அல்லது முற்றுக அலட்சியஞ் செய்யத்தக்கன என்பதை ஆறவமரப் பின் தங்கியிருந்து நாவலர் பெருமான் எனும் பெரிய விருட்சத்தின் கீழிருந்து அதன் கிளைகள் ஒவ்வொன்றின் தன்மையினையும் ஆராய்ந்து பார்ப்போம்.

தலைசிறந்த தமிழ் எழுத்தாளராக மலர்வதற்குரிய நேர்மையான நெடுவழி தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகக் குருசிக்ஷ்ய முறைப்படி கற்று வடமொழியையும் நன்கு கற்று ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழியையும் கற்று நன்கு முற்றிய நெற்கதிர்களைக் கொண்ட செஞ்சாலி தலைசாய்ந்து நிற்பதொப்ப அடங்கி நாம் கண்ட உண்மைகளை அச்சமின்றி எழுதுவதாகும். ஆனால் குறுக்கு வழியும் இக்காலத்திலே ஒன்றுண்டு. தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பற்றிப்பிறர் எழுதிக் குவித்துள்ள குப்பை கூளங்களையும் தமிழறிஞர்கள் ஆசார சீலர்களைப் பற்றி நுனிப்புல் மேய்வதொப்ப, அங்குமிங்குமாகக் கடிக்கும் ஆடுகளொப்ப ஆழ்ந்தகன்ற கல்வியும் அமைதியுமின்றி எழுதப்படும் கட்டுரைக் குப்பைகளை தாங்கி இளமங்கையரின் மூவர்ணப் படங்களையுடைய அட்டைகளுடன் வெளியாகி தேநீர்க்கடைகளிலும் புத்தகக் கடைகளிலும் வௌவால்களைப்போலத் தலைகீழாகத் தொங்கி பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து அட்டைப்படச் சாயம் வெளுத்து அநேக நூல்களை ஆவலுடன் படித்து, அதனால் அறிவு தலைக்கேறப்பெற்று நல்லவர் பெரியவர்கள் என உயர்ந்தோர் மதிக்கின்றவர்கள்மீது சிறு சிறு கற்கள் வீசிப் பலருடைய கவனத்தையும் ஈர்ப்பது எழுத்தாளர் எனும் புகழ் ஏணியில் ஏறுவதற்கு மிகவும் குறுகிய வழியாகும். குறுக்காலே இறங்குகிற வண்டி மாடுகளைத் தெருவில் செல்கின்றவர்கள் கவனிக்காதிருக்க முடியுமா? பெருந் தெருவிலே ஒழுங்காகச் செல்கின்ற வண்டி மாடுகளையோ மோட்டார் வாகனத்தையோ எவரும் கவனிப்பதில்லை. ஆனால் தெரு நடுவிலுள்ள மின்விளக்குத தண்டுடன் மோதி விபத்துக்குள்ளாகும் நோக்கத்துடன் பிழையான முறையில் இடது பக்கமாக முந்திச் செல்லும் வண்டியையும் மோட்டார் வாகனத்தையும் தெருவில் போய்வருகின்றவர்கள் பார்த்துக் கைதட்டிச் சிரிப்பதை அவ்வண்டி மாடுகளோ மோட்டார் சாரதியோ உணர்வதில்லை.

இனி நாவலர் பெருமான் எனும் கற்பகதருவை, பல விழுதுகள் விட்ட பெரிய ஆலமரத்தைச் சிறிது நோக்குவாம். சின்னஞ்சிறு வயதிலே படித்த ஒரு பாடம் இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றது. "குருடர்கள் கண்ட யானை" என்பது அப்பாடத்தின் தலையங்கம் என்று நம்புகிறேன். இத்தகைய ஆராய்ச்சி முடிபுகளே நாவலர் அவர்களின் ஒருசில கட்டுரைகளைப்படித்துவிட்டுக் இளைஞர் குழாம் செய்யும் ஆராய்ச்சியின் பயனாகும்.

# இதுவா மானிடப் பிறவி?

— கவியோகி சுத்தானந்த பாரதியார் —

[மலைநாட்டுத் தொழிலாளர் வாழ்க்கையை நேரிற் பார்த்தபோது கவியோகியின் உளத்தில் எழுந்த பாடல்]

இதுவா மானிடப்பிறவி - இதை
எண்ணிப்பார் அண்ணே
மெதுவாய் உள்ளே யோசித்துப்பாரு
விவேக வழி சேரு - அண்ணே (இதுவா)
காலையில் எழுந்து கைமுகங் கழுவிக்
கடவுளை நினைக்காமே
கனமாய் முக்காடு போட்டுத் தூங்கிக்
கனவில் உளறுகிறாய் - அண்ணே (இதுவா)
மாலையிலே சிவ முருகா என்றே
மனசு நினைக்காமே
மாயாசாலச் சினிமாவினிலே
மயங்கிப்போனுயே - அண்ணே (இதுவா)
வேலைசெய்த கூலிப்பணத்தை
வீட்டுக்குத் தாராமே
வேதனை செய்யும் கள்ளைக் குடித்து
வெறிபிடித்தலைகின்றாய் - அண்ணே (இதுவா)
பாலைக் குடிப்பாய் நீராகாரம்
பதனீர் பருகிடுவாய்
பாழுங்கள்ளைக் குடித்து வீட்டைப்
பட்டினி போடாதே - அண்ணே (இதுவா)
பீடி சுருட்டுப் புகையிலைத் துப்பல்
பீடைப் பழக்கமடா
பேய்போல் புற்றுநோயுண்டாகும்
பெருநோயும் வருமே - அண்ணே (இதுவா)
ஓடி ஓடி உழைத்த பணத்தை
ஊதாரிக் கீயாதே
உத்தமி தந்த உணவைத்தள்ளி
ஓட்டலுக் கோடாதே - அண்ணே (இதுவா)
கட்டிக் கொண்டு பொங்கிப் போடும்
கண்மணியைவிட்டு
வெட்டை ஓட்டும் விபசாரத்தை
விலைக்கு வாங்காதே - கண்
வலைக்குள் வீழாதே - அண்ணே (இதுவா)
மூதேவிக்கிடம் கொடுத்து நாளும்
மோசம் போகாதே
முடிச்சவிழ்க்கும் கும்பலைநம்பி
முதலையிழக்காதே - அண்ணே (இதுவா)
கம்பனியென்று கரடியைக் கட்டுக்
கடி வாங்காதேடா
கடனை வாங்கிக் கையைப் பிசைந்து
கவலை சுமக்காதே - அண்ணே (இதுவா)
வம்புதும்பில் மாட்டிக் கொண்டு
வழக்குப் போடாதே
வாதாடாதே சூதாடாதே
வாழ்வு பாழாமே - அண்ணே (இதுவா)
சந்தோஷமாய்க் கூடிவராழச்
சம்மதமா அண்ணே
சாமியை நம்பி சண்முகவடிவேல்
சரணம் என்பாயே (இதுவா)
சிவ முருகா ஓம் சிவமுருகா ஓம்
சிவ முருகாஜப ஓம்
சிவ முருகா ஓம் சிவமுருகா ஓம்
சிவ முருகா ஜய ஓம் (இதுவா)

## நேர்மையும் பொது நோக்கும் கூட்டுறவு இயக்கத்தின் உயிர் நாடி

புள்ளியவளை, வியாழன்:

"மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடியதான கூட்டுறவு இயக்கம், மக்களுக்குப் பயனளிக்கவேண்டுமானால், அதிகாரிகள் நிர்வாகிகள் ஊழியர்கட்கிடைகிய நேர்மையும் பொதுநோக்கமும் நிறைந்திருக்கவேண்டும். அவையே, கூட்டுறவு இயக்கத்தின் உயிர்நாடிகளாகும்."

வவுனியாப் பகுதியிலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள், சமாஜங்களிலுள்ள ஊழியர்களை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டவுக் குழுவினர், நெடுங்கேணியில் தமது விசாரணையை நடத்தியபோது சாட்சியமளித்த பெரியகுளம் கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகள், மேற்கண்டவாறு அபிப்பிராயம் தெரிவித்தனர். நால்வரைக்கொண்ட இக் குழுவுக்கு ஆசிரியர் திரு. பொ. சந்திரசேகரி தலைமைதாங்கினார்.

## ராஜினுமா வாபஸ்

பருத்தித்துறை, புதன்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவரும் இதர அங்கத்தவர்களும் தமது ராஜினுமாவை வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

கூட்டுறவு ஆணையாளரது வேண்டுகோளின் பேரிலேயே வாபஸ் வாங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## ஐயாறன் எழுதுவது

மலைநாட்டுத் தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க, ரத்னபுரியைச் சேர்ந்த ஒரு பிக்கு புதியதோர் யோசனையைக் கூறுகின்றார்.

தோட்டத்திலுள்ள படித்த தமிழ் வாலிபர்களில் பலர், பௌத்த பிக்குகளாக வேண்டுமென்று ஆவல்கொண்டு, அவருக்கு மனுச்செய்திருக்கிறார்களாம். பெல்மதுளையில் இந்தியத் தமிழருக்கு பிக்குகளுக்கான பயிற்சி அளிக்கப்படுமென்றும், அப்படி பயிற்சிபெற்றவர்களை, பின்னர் மலைநாட்டிலுள்ள தமிழரிளிடையே பௌத்த சமயம்பற்றி பிரசாரம்செய்ய அனுப்பஇருப்பதாயும் அவர் தெரிவிக்கின்றார். பயிற்சி பெறுகிறவர்களுக்கு, தோட்டங்களிலே பௌத்த கோவில்கள் கட்டவும், உணவு அளிக்கவும் வேண்டிய உதவிகள் அளிக்கப்படுமாம்!

* * *

தோட்டங்களிலுள்ள தமிழ் மக்களுக்கு அவர்கள் 'தம்ம' உபதேசம் செய்வரென்றும், இதனால் சிங்களவருக்கும் தமிழருக்கும் நெருங்கிய உறவு ஏற்பட உதவியாக இருக்குமென்றும், சொற்ப சிங்கள அறிவும், பௌத்த அறிவும், தோட்டத் தமிழருக்கும் சிங்களவருக்குமுள்ள வேற்றுமை தீரவும், சில வருடங்களிலே கலப்பு மணங்கள் ஏற்படவும் உதவுமென்றும் கூறுகிறார், ரத்னபுரி ஸ்ரீ சுமணபிரவீண அதிபரான அந்த புத்த பிக்கு.

இந்தியத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அது ஒன்றே வழியென்றும், இதற்கு அரசாங்கம் உதவுமென்பதில் சந்தேகமில்லை என்றும் நம்புகிறார் அவர்.

பெல்மதுளையிலுள்ள பௌத்த கல்விக் கழக கட்டிட வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. இங்கு சுமார் 100 பிக்குகள் வசித்து பயிற்சி பெற வசதிகளுள்ளன என்று ஒரு செய்தி கூறுகிறது. இனி இரு தேசப் பிரதமர்களும் கூடிப் பேசவேண்டிய தேவைஎன்ன!

* * *

ஹன்பிடகெதர ஞானசிக தேரோ என்ற அந்தப் பிக்கு இத்துடன் நிறுத்த வில்லை. அவர் இந்தியாவுக்கு சீக்கிரத்தில் செல்லப்போகிறார். அங்கிருந்து 10 ஹரிஜன வாலிபர்களை இலங்கைக்கு அழைத்து வந்து, வெள்ளவத்தை பௌத்த அகடமியில், புத்த பிக்குகளாகப் பயிற்சி அளிக்கப் போகிறாராம். ஏன்? பயிற்சி முடிந்ததும், அந்த ஹரிஜன பிக்குகள், இந்தியா திரும்பி தங்கள் இனத்தாரிடையே 'தம்ம' பிரசாரம் செய்வார்களென்றும் தெரிவித்தார். நாவலர் பெருமானுக்கு இச்செய்தி அர்ப்பணம்!

* * *

ஹரிஜனங்களை மதம்மாற்ற இதுவரை எவ்வளவோ முயற்சிகள் நடந்துள்ளன. லட்சக்கணக்கான ஹரிஜனங்கள் வேறு மதங்களுக்கு மாறியுமுள்ளனர். ஏன்? தாங்கள் பிறந்த இந்துமதம் மோசமென்றும் பிற மதங்களே மேலென்றும் சீர்தூக்கிப்பார்த்ததாலா? அல்லது தீண்டாமை, சாதிக் கொடுமை இவைகளிலிருந்து தப்பிச் செல்லவா?

தீண்டாமைத் தீமை இந்து சமயத்தின் ஆணிவேரை அறுத்துவிடுமென்று எச்சரித்தார் காந்தி அடிகள். அத்தீமையை ஒழிக்க அரும்பாடுபட்டதும் இச்சமயம் ஞாபகம்வருகிறது.

* * *

இதே சமயத்தில் கதிர்காமத்தான் இந்து—பௌத்த ஒற்றுமையை வளர்ந்துவருவதைப் பார்க்கிறோம். பௌத்தர்கள் திருநீறு பூசி, சந்தனமிட்டுக் காவடி தூக்கி. ஹரோஹரா கோஷங்கள் செய்யும் காட்சிகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம்.

# "உலகத்தை கம்யூனிஸமாக்கும் முயற்சியை விடவேண்டும்"

## ரஷ்யாவுக்கு கென்னடி யோசனை

### 'இஸ்வெஸ்தியா'வுக்கு அளித்த பேட்டி விபரம்

மாஸ்கோ, நவ. 29

உலகில் கம்யூனிஸத்தை நவலுக்கட்டாயமாகத் திணிக்கும் முயற்சிகளைக் கைவிட்டு, அவரவர் அரசாங்கத்தை அந்தந்த நாட்டு மக்கள் தெரிவு செய்துகொள்ள சோவியத் யூனியன் அனுமதிக்குமானால் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் சமாதானமாக வாழமுடியும்" என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன். எப். கென்னடி சோவியத் அரசாங்கத்தின் பத்திரிகையின் 'இஸ்வெஸ்தியா' வுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

சோவியத் பிரதமர் குருஷ்சேவின் மருமகனை ஆசிரியராகக் கொண்ட இப்பத்திரிகையின் முதல் பக்கத்தில் திரு. கென்னடியின் பேட்டி நேற்று வெளியிடப்பட்டிருந்தது.

அணு ஆயுத சோதனைத் தடை, படை குறைப்பு, பெர்லின் ஜெர்மனி, கியூபா முதலிய பிரச்னைகள் பற்றி ஜனாதிபதி கென்னடி தமது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுத சோதனைத் தடை முழுப்படை குறைப்புக்கு முதல்படியென்பதே தமது கருத்து என்று ஜனாதிபதி தெரிவிததுள்ளார்.

உலகம் முழுவதையும் கம்யூனிஸமாக்கும் முயற்சியை சோவியத் யூனியன் கைவிட வேண்டுமென்றும் திரு. கென்னடி கூறியுள்ளார்.

மேற்கு பெர்லின் மக்கள் விரும்பும்வரை மேற்கு பெர்லினில் மேற்கு நாடுகள் உறவு கொண்டிருக்குமென்று அவர் தெரிவித்தார். மேற்கு பெர்லினில் மேற்கு நாடுகளுக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் சோவியத் யூனியன் அங்கீகரிக்குமென்று ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனம் ரஷ்யாவுக்கு எதிரானதல்ல என்று கூறிய ஜனாதிபதி கென்னடி வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபன படைகளுக்கு அணு ஆயுதங்கள் வழங்குவதை தாம் ஆதரிக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

## காங்கோ - ஐ. நா. ஒப்பந்தம்

நியூயோர்க், நவ. 29

ஐ. நா.வுக்கும் காங்கோ அரசாங்கத்துக்கு மிடையில் நேற்று ஒரு ஒப்பந்தம் ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் கைச்சாத்தானது. காங்கோவிலுள்ள ஐ. நா. சிப்பந்திகளின் அந்தஸது, உரிமைகள் சம்பந்தமான இந்த ஒப்பந்தத்தில் காங்கோ அரசாங்கத்தின் சார்பில் காங்கோ வெளிவிவகார மந்திரி திரு. பொம்பக்கோவும் ஐ. நா. சார்பில் தற்காலிக தலைமைக் காரியதரிசி யு. தாண்ட்டும் கைச்சாத்திட்டனர்.

---

## அணு ஆயுத சோதனைத் தடை மகாநாடு

ஜெனிவா, நவ. 29

அணு ஆயுத பரிசோதனைத் தடைப் பேச்சு வார்த்தைகள் இரண்டு மாதகால இடைவேளைக்குப் பின் நேற்று மீண்டும் ஜெனிவாவில் ஆரம்பமானது. அணுஆயுத சோதனைத் தடை சம்பந்தமாக சோவியத் யூனியன் புதிதாகச் சமர்ப்பித்துள்ள நான்கு அம்சத் திட்ட ஒப்பந்தத்தை அமெரிக்கப் பிரதிநிதியும் பிரிட்டிஷ் பிரதிநிதியும் நேற்றைய மகாநாட்டில் வன்மையாகக் கண்டித்துப் பேசினர்கள்.

---

## சபாநாயகர் தீர்ப்பு

புதுடில்லி, ந

சட்டசபையில் சபாநா...ரின் தீர்ப்பை ஆட்சேப... அங்கத்தவர்கள் தனியாக... கோஷ்டியாகவோ வெளி... புச் செய்தால் அது சபா... கரையும் சபையையும் ... மதித்ததாகுமென்று ஓ... சட்டசபை சபாநாயகர் ... றுத் தீர்ப்பளித்தார்.

---

## 80 சிப்பாய்கள் ... கொல்லப்பட்டன...

லண்டன், ந

போர்ச்சுக்கீஸியரின் ... கத்திலுள்ள அங்கோல... சுமார் பத்துத் தினங்க... முன் போர்ச்சுக்கீஸிய சிப்... களுக்கும் தேசீயவாதிக... மிடையில் ஏற்பட்ட கை... யில் 80 போர்ச்சுக்கீஸிய ... பாய்கள் கொல்லப்பட்ட... ளென்று தேசீய விடுதலை ... க்கத்தினர் தெரிவித்தனர்...

# சைவமும்தமிழும்வளர்க்க கவியோகி யோசனை

## நாவலப்பிட்டியில் வரவேற்பு வைபவம்

நாவலப்பிட்டி, செவ்வாய்

"தமிழர் சமுதாயம் சிறக்க ஒரு குறிக்கோள் வேண்டும். சமுதாயத்திற்கு புகழ் வர உங்கள் கலைகளை ஆதரிக்கவேண்டும். கலையை வளர்ப்பதால் தான் நன்ருக வாழ வழியேற்படும். உங்கள் சமயத்தைப் போற்ருவிட்டால் தாழ்ந்து போய் விடுவீர்கள்".

இவவாறு கவியோகி சுத்தானந்த பாரதியார் தொளஸ்பாகையிலுள்ள தாமரவல்லித் தோட்டத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். கூட்ட ஆரம்பத்தில் சுவாமிகள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். தோட்ட முதலாளி திரு. அ. வ. கிருஷ்ணபிள்ளை மலர்மாலை சூட்டி வரவேற்ருர். கோவில் வீதிகள் மகர தோரணங்களாலும் மலர்களாலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா இவ்விழாவிற்கு தலைமைவகித்து சுவாமிகளை வரவேற்றுப் பேசுகையில் ஆறு வயதில் அன்னை பராசக்தியின் அருள்பெற்று பாடிய கவியென்றும், முற்பிறப்பில் செய்த தவப்பயனை முடிக்க வந்த யோகியென்றும் வியாசர் என்றும் கூறி வரவேற்ருர்.

கவியோகி சுத்தானந்தபாரதியார் மேலும் கூறியதாவது:-

...தொண்டு செய்வது போல் சைவத் தொண்டர்களும் சமயப் பிரச்சாரம் செய்ய வேண்டும். தமிழ் நாட்டைவிட சமய சேவையும் தமிழார்வமும் மிகுந்த இளைஞர்கள் இலங்கையில் உள்ளனர். உங்களைப் போன்ற தொண்டர்கள் பத்தாயிரம்பேர் முயன்ருல் அகில உலகிலும் சைவத்தையும் தமிழையும் வளர்க்க முடியும்.

ஸ்ரீமதி பொன்னம்மாள் கிருஷ்ணபிள்ளை நன்றியுரை கூறினர்.

"உள்ளத்திலுள்ள தத்துவங்கள் கோவில் அமைப்பிலும் அடங்கியிருக்கின்றன. பண்டைக்காலத்தல் கோவில்கள் மூலம்தான் நாகரிகத்தை வளர்த்தனர். கோவிலை விட்டால் தமிழர் நாகரிகம் போய்விடும். கோவில்களை அலட்சியம் செய்ததால் தான் இன்று இந்த கதியேற்பட்டிருக்கிறது" என்று கவியோகி சுத்தானந்த பாரதியார்நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். கதிரேசன் கல்லூரி மண்டபத்தின் உள்ளும் புறமும் பெருந்தொகையான மக்கள் குழுமிநின்று உபதேசத்தைக் கேட்டனர். இந்து வாலிபர் சங்கத்தின் உபதலை... வர் திரு. பி. எஸ். இலட்... மணன் இவ்வரவேற்புக் கூ...

# போர்த்துக்கீசிய ஆதிக்கத்தை அகற்ற நடவடிக்கை

## திருமதி லட்சுமிமேனன் தகவல்

புதுடில்லி, நவ. 29

'போர்ச்சுக்கீஸியரின் ஆதிக்கத்திலுள்ள பாரதத்தின்பகுதிகளை விரைவில் விடுவிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது' என்று இந்திய பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் திருமதி லட்சுமிமேனன் நேற்று ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

"தங்கள் ஆதிக்கத்திலுள்ள மக்களைக் கொடுமைப் படுத்துவது போர்ச்சுக்கீஸியரின் வழக்கம்தான் என்றாலும் சில சமயங்களில் அவர்கள் மிரட்சியடைந்து அனுவசியமாக மககளைத் துன்புறுத்துகின்றனர். சென்ற ஆகஸ்ட் மாதம் 15-ந் திகதி கோவாவில் கிளர்ச்சி ஏற்படக் கூடுமென அச்சம் கொண்டு பெருமளவில் மக்களைக் கைதுசெய்து துன்புறுத்தினர்" என்று திருமதி மேனன் தெரிவித்தார்.

### இந்திய கடற்படை கப்பல்கள்

அஞ்சுதீவுக்கு அருகே, கார்வார் பகுதியில் சென்ற வெள்ளிக்கிழமைமீன்பிடிப்படகு ஒன்றின் மீது போர்ச்சுக்கீஸியர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின்னர் நேற்று மீண்டும் அப்பகுதியில் மீன்பிடிப் படகுகள் வழக்கம்போல் தங்கள் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தன.

இதே சமயம் அஞ்சுதீவுக்கு அருகில் போர்ச்சுக்கல் கடற்படையைச் சேர்ந்த பீரங்கிக் கப்பல் ஒன்று நங்கூரம் பாய்ச்சி நிற்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

கார்வார் பகுதியில் இந்திய கடற்படையைச் சேர்ந்த 'ராஜ்புட்' என்ற கப்பலும் மற்ளுெரு கப்பலும் சென்றிருப்பதாக மற்ளுெரு செய்தி கூறுகிறது.

சென்ற வெள்ளிக் கிழமை அஞ்ச தீவுக்கு அருகே மீன்பிடிப்படகுமீது போர்ச்சுக்கீஸிர் சுட்டது பற்றி விவாதிக்க வேண்டுமென்று மைசூர் ராஜ்ய மேல் சபையில் ஒரு அங்கத்தவர் கொண்டு வந்த அவசரப்பிரேரணையை சபைத் தலைவர் நிராகரித்துவிட்டார். இது ராஜ்ய அரசாங்கத்துக்கு அப்பாற்பட்ட விஷயமென்றும் இது சம்பந்தமான முழுவிபரங்களும் மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டதென்றும் அவர் தெரிவித்தார்.

---

## 'முன்னேற்றத்துக்கு உதவிசெய்ய வேண்டும்'

### வவனியா எம். பி. கோரிக்கை

முள்ளியவளை, புதன்

"பின்தங்கிய ஒரு சமூகம் முன்னேறவேண்டும் என்ற மனப்பான்மை இன்றைய தமிழினத்துக்கு இருக்கவேண்டியது அவசியமாகும். முன்னேற்றத்துக்கு உதவிபுரியவேண்டியதும் அவர்கள் கடமையாகும். அங்ஙனம் உதவி புரிய முடியாவிட்டாலும் உபத்திரமாவது செய்யாமலிருப்பதும் சிறந்த ஒரு குணமாகும்."

பள்ளவெளிச் சனசமூக நிலையம் சம்பந்தமாக அங்குள்ள இரு வகுப்பாருக்கிடையே ஏற்பட்ட தகராறுகளைத் தீர்ந்து வைக்குமுகமாக வற்ருப்பளையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில், வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காரைதுறைப்பற்றுக் காரியாதிகாரி திரு. மா. நடராசா தலைமைவகித்தார்.

முள்ளியவளைக் கிராமசபைத் தலைவர் திரு. வே. அண்ணாமலை, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பொன்டிக்ற் முதலியோரும் பேசினர்.

# சென்னை... தி. மு. க. மேயர்

சென்னை, நவ. 29

சென்னை நகரின் புதிய மேயராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. பி. குசேலர் நேற்றுத் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு. குசேலருக்கு 48 வாக்குகளும் அவருடன் போட்டியிட்ட நகர நல முன்னணி அபேட்சகர் திரு. வேலுவுக்கு 45 வாக்குகளும் கிடைத்தன.

திரு. குசேலரும் திரு. வேலுவும் ஹரிஜன வகுப்பைச்சேர்ந்தவர்கள்.

...ராம சபைத் தலைவர் திரு. இ. வேலாயுதர் தலைமையில் நடைபெற்றது.

மதுவினல் ஏற்படும் தீமைகளைப்பற்றிப் பலர் கூட்டத்தில் எடுத்துக் கூறினர்.

நாடு முழுவதிலும் மதுவிலக்கு அமுல் நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# நீதவான் வீட்டில் திருட்டு

## சமையற்காரனுக்கு சிறை

மன்னர், செவ்வாய்

மன்னர் நீதவான் திரு. டி. ஜே. ராஜரத்தினத்தின் அலுமாரிக்குள்ளிருந்து 50 ரூபாய் திருடியதாக நீதவானின் சமையற்காரன் எம். ஹென்றி என்பவர்மீதும் டபிள்யு. டி. குருஸ் என்னும் சாரதிமீதும் குற்றம் சாட்டி மன்னர் மேலதிக நீதவான் திரு. கே. சின்னத்தம்பி முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் எதிரி ஹென்றி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

ஹென்றிக்கு இரண்டுமாதம் பத்து நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

குருஸ்மீதுள்ள வழக்கு விசாரணை ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## அம்மைநோய் தடுப்பு நடவடிக்கை

கொழும்பு, புதன்

கேகாலையில் டெபத்கம பகுதியில் பெருமளவில் அம்மைப்பால் குத்தப்பட்டுள்ளது. பெரியம்மை நோய் பரவாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார இலாகா அறிவித்தது

# இலங்கைக்கு ரஷ்ய பெட்ரோல் இறக்குமதி

## பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளது.

கொழும்பு, புதன்

ரஷ்யாவிலிருந்து பெட்ரோலை இறக்குமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் இப்போது ஆரம்பமாகியுள்ளன. இலங்கையில் உற்பத்தியாகும் ரப்பர், தென்னம் பொருட்கள் ஆகியவற்றை ரஷ்யா வாங்கிக் கொள்வதற்கான உடன்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கையில் தற்போதுள்ள ரஷ்ய வர்த்தகத் தூதுகோஷ்டி இவ்வாரக் கடைசியில் இலங்கையுடன் புதிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வர்த்தக ஊழியரின் கடமை நேரம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண வர்த்தக ஊழியர் சங்கம் வர்த்தக ஊழியர்களுக்கு விடுத்திருக்கும் ஒரு வெளியீட்டில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"கடை, காரியாலய ஊழியர்கள் சட்டத்தின்படி சாப்பாட்டுக் கடைகள், பெட்ரோல் நிலையங்கள், மருந்துக்கடைகள், புதினப் பத்திரிகைகள் விற்பனவு நிலையங்கள் இவைகளைத் தவிர மற்றும் ஏனைய வியாபார ஸ்தாபனங்கள் யாவும் கிழமை நாட்களில் காலை 9 மணிக்கு வியாபாரத்திற்குத் திறந்து, திங்கள், செவ்வாய், வியாழன் நாட்களில் மாலை 6 மணிக்கும் புதன், வெள்ளி

## சென்னையில் திராவிடர் கழக மகாநாடு

சென்னை, நவ. 28

சென்னை நகரில் திராவிடர் கழகம் 2 நாள் மகாநாடு விரைவில் நடத்த உத்தேசித்திருக்கிறது. டிசம்பர் இறுதியில் அல்லது ஜனவரி துவக்கத்தில் மகாநாடு நடைபெறும்.

முதல்நாள் மகாநாடு திராவிடர் கழக மகாநாடு. இரண்டாம் நாள் வாக்காளர் மகாநாடு நடைபெறும். இரு மகாநாடுகளில் லட்சத்திற்கு அதிகமான மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட நாட்களுக்குப் பின் சென்னையில் திராவிடர் கழக மகாநாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமையில் மத்தியானம் 2 மணிக்கும் வியாபாரம் முடித்துக் கடமைகளை அடைக்க வேண்டும் அடைக்கும்சமயம் யாராவது வாடிக்கைக்காரர் கடைக்குள் இருந்தால் அவருக்குமட்டும் அடைக்கும் நேரத்துக்குப் பின் அரைமணி நேரத்துக்குள் விற்பனவு செய்து அனுப்பிவைக்கலாம். தொழிலாளியாளரின் அனுமதியில்லாமல் மற்றும் நேரங்களிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் வியாபாரத்திற்குக் கடைகளைத் திறந்துவைத்திருத்தலாகாது.

## சந்தேகநபரை ரிமாண்டில் வைக்க உத்தரவு

தெல்லிப்பழை, புதன்

கல்லாக் கட்டுவனைச் சேர்ந்த சின்னவி செல்லப்பாவுக்குச் சொந்தமான மாட்டைத் திருடியது சம்பந்தமாக அதே கிராமத்தைச் சேர்ந்த கந்தையா நாகலிங்கம் என்பவரைச் சுன்னாகம் பொலிசார் மல்லாகம் தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. எஸ். இளையதம்பி முன்னிலையில் ஆஜர்செய்த போது தற்காலிக மாஜிஸ்டிரேட்சந்தேகநபரை டிசம்பர் 5ம் திகதிவரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். சந்தேகநபர் மாட்டைக் கொன்று இறைச்சியின் ஒரு பாகத்தை எடுத்துக்கொண்டார் எனவும் மிகுதி இறைச்சியும் தோலும் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் கோர்ட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சந்தேககபரை சுன்னாகம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. இஸ்மாயில் கோர்ட்டில் ஆஜர் செய்தார்.

## குடும்பக் கட்டுப்பாடு தின விழா

### டிச. 18-ல் கொண்டாட ஏற்பாடு

சென்னை, நவ. 28

இவ்வாண்டு டிசம்பர் 18-ம் நாள் குடும்பக் கட்டுப்பாடு தினமாக நாடெல்லாம் கொண்டாடப்படும்.

இதையொட்டி தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மலர்கள் வெளியிடப்படும்.

தேனம்பேட்டை காங்கிரஸ் திடலில் கண்காட்சி ஒன்று நடத்தப்படும்.

குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை விளக்கும் புகைப்படங்கள், போஸ்டர்கள் ஆகியவை வெளியிடப்படும்.

செய்திப் படங்கள் காட்டப்படும். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மக்களிடையே நல்ல முறையில் பரப்பத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இது சம்பந்தமான அரசாங்க உத்தரவு ஒன்றில் இந்த விவரங்கள் அடங்கியுள்ளன.

## சென். சேவியர் கல்லூரி பழையமாணவர் தினம்

மன்னார், செவ்வாய்

சென். சேவியர் கல்லூரியின் பழைய மாணவர் தினம் கல்லூரியின் பழையமாணவரான வண. பிதா ஜோய் கிறிஸொஸ்தத்தினால் நடாத்தப்பட்ட நற்கருணை பூஜையுடன் ஆரம்பமாகியது.

பழைய மாணவர்களுக்கும் தற்போதைய மாணவர்களுக்குமிடையிலான உள், வெளி

விளையாட்டுப் போட்டிகளும் அன்று நடைபெற்றன.

தற்போதைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் நடைபெற்ற கைப் பந்தாட்டப்போட்டியில் மாணவர்கள் ஆசிரியர்களைத் தோற்கடித்தார்கள்.

# இறைச்சி, வெண்ணைக்கு அதிக விலை

## சுங்க இலாகா பிரதமஅதிகாரி அறிவிப்பு

கொழும்பு, புதன்

வெண்ணை, சாக்லேட்டுகள், மருந்துகள், டின்னில் அடைக்கப்பட்ட மீன், இறைச்சி, ஜாம், வாசனைப் பொருட்கள் ஆகியவற்றுக்கு இனி அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும். சாமான்களுக்கு மொத்த மார்க்கெட் விலையை அனுசரித்து வரி விதிக்கப்படும். 39 பொருட்கள் இதனால் பாதிக்கப்படும். சுங்கஇலாகா பிரதம கலெக்டர் இதுபற்றி அறிவித்துள்ளார்.

## கூட்டுறவு யூனியன் கூட்டம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை

சாவகச்சேரி, செவ்வாய்

தென்மராட்சியிலுள்ள பலநோக்கு கூட்டுறவு யூனியனின் கிளைச்சங்கங்களின் இருபகுதியினரின் ஆட்சேபனை காரணமாக கூட்டுறவு இலாகா கமிஷனர், கூட்டுறவு யூனியன் சென்ற ஜூன் மாதம் 17-ம் திகதி நடத்திய வருடாந்தப் பொதுக்கூட்டம் அங்கீகரிக்கப்படமாட்டாது என அறிவித்துள்ளார்.

கூட்டுறவு சட்டத்தின் விதிப்படி கிளைச்சங்கங்களுக்கு அறிவித்தல்கள் கொடாது பிரதிநிதிகளுக்கு மட்டுமே அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டதால் இப் பொதுக்கூட்டம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதெனக் கமிஷனர் அறிவித்துள்ளார்.

உத்தியோகஸ்தர்களைத் தெரிவு செய்வதற்காக டிசம்பர் மாதம் 9-ம் திகதி பொதுக் கூட்டமொன்றைக் கூட்டுமாறு கமிஷனர் கூட்டுறவு அபிவிருத்தி இலாகா உதவி கமிஷனரிடம் அறிவித்துள்ளார்.

## சுப்பிரமணியம் லோகசபைக்கு போட்டி

சென்னை, நவ. 28

தமிழ்நாட்டிலிருந்து பார்லிமெண்டுக்கு காங்கிரஸ் சார்பில் போட்டியிட கீழ்க்கண்ட பெயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நம்பகமாகத்தெரிகிறது.

மந்திரி திரு. சி. சுப்ரமணியம் (பொள்ளாச்சி)

த. நா. கா. க. தலைவர் திரு. அழகேசன் (செங்கல் பட்டு)

மத்திய மந்திரி டாக்டர் சுப்பராயன் (திருசங்கோடு)

முன்னைள் துணை அமைச்சர் திருமதி மரகதம்சந்திரசேகரன் (குன்றத்தூர்)

திரு. சி. ஆர். நரசிம்மன் (ராஜாஜி மகன்) (கிருஷ்ணகிரி)

திரு. பி. ஆர். ராமகிருஷ்ணன் (கோவை)

செட்டி நாட்டரசர் திரு. முத்தையா செட்டியார் (புதுக் கோட்டை)

## பாரத - பாகிஸ்தான் எல்லைச் சம்பவம்

புதுடில்லி, நவ 28

சமீபத்தில் பாரத-பாகிஸ்தான் எல்லையில் பலாத்கார சம்பவங்கள் அதிகரிக்கவில்லை என அறிவிக்கப்படுகிறது.

# "இந்துமத இந்தியாதான் வளரமுடியும்"

## அ. இ. இந்துமகாசபை தேர்தல் அறிக்கை

புதுடில்லி, நவ. 28

இந்தியாவை இந்து மத அடிப்படையில் அமைத்தால் தான் அதனை மக்கள் ஜாதி மத மொழி வேறுபாடின்றி உண்மையான ஜனநாயகத்தை நோக்கி எழுச்சியுடன் முன்னேற முடியும் என்று அகில இந்திய இந்து மகாசபையின் தேர்தல் கொள்கை அறிக்கை தெரிவிக்கிறது.

சட்டபூர்வமான வழிகளில் அகண்ட இந்துஸ்தான் அமைப்பதே அதன் இறுதியான லட்சியமாகும் என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

இந்துக்களின் கலாச்சார பாரம்பரியத்திற்கு ஏற்ப அரசியல் சட்டத்தை மாற்றி அமைப்பதும் சங்கத்தின் லட்சியங்களில் ஒன்றாகும்.

இதர நாடுகளுடன் ராணுவக் கூட்டணி செய்துகொள்ள வேண்டும். நாட்டில் இளைஞருக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கவும் வேண்டும் என்று அவ்வறிக்கை கூறுகிறது.

இப்போதுள்ள நிலைமையில் தனித்து நின்று இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்திருக்கிறது.

சீனவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து விட வேண்டும். சீனவை ஐ. நா. வில் அனுமதிக்கவும் கூடாது.

நாட்டின் நலத்தையே மனதில் கொண்டு மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிடாதிருக்க வேண்டும்.

பாகிஸ்தான் விஷயத்தில் பதிலுக்குப்பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

காமன்வெல்த்திலிருந்து விலக வேண்டும்.

எல்லாத் தொழில்களும் அரசாங்க வசமாக வேண்டும். இந்தியர்கள் அல்லாதவரை இந்தியாவில் தொழில் நடத்த விடக்கூடாது.

கூட்டுறவு விவசாயத்திற்கு ஆதரவு அளித்து, உழைப்பின் பயனை விவசாயிகளுக்கே விட்டு விடவும் அதற்கு அறிக்கை கோருகிறது. தொழிலைப் போலவே, விவசாயமும் சர்க்கார் வசமாக வேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே

பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை

யளிப்பதும் இதுவே







முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

மொத்த விற்பனை விநியோகஸ்தர்கள்:

- மில்லஸ்ர் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணகலை.
- என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் ஹார்ட் வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
- எச். ஏ. பகஸ்ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

Y-O-VAC RAY-O-VAC RAY-O-VAC